செய்தி வெளியீடு எண்: 03 நாள்: 02.03.2018

***தேனி மாவட்டம்,***
***வியாபாரிகள் உணவகங்கள், தேநீர் நிலையங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் நெகிழி (Plastic) பைகள் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை மேற்ககொள்ளப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-***

தேனி மவாட்டத்தில் செயல்பட்டு வரும் உணவகங்கள், தேநீர் நிலையங்கள், பொது இடங்கள், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள், திருமண மண்டபங்கள் மற்றும் அன்னதானம் வழங்கும் இடங்களில் உணவு பொருட்கள் வழங்கிட நெகிழி (Plastic) பைகள், நெகிழி தாள்கள், நெகிழி குவலைகள் மற்றும் நெகிழி தட்டுக்கள் பயன்படுத்துவதினை தவிர்த்திட வேண்டும். சூடான உணவு பொருட்களை நெகிழி பைகளில் கட்டுவதாலும், நெகிழி குவலையை பயன்படுத்தி இட்லி தயாரிப்பதனாலும், புற்றுநோயும், ஆண்களுக்கு மலட்டுத்தன்மையும் ஏற்படுவதோடு, இயற்கை மாசுபாடு ஏற்படுகிறது.

எனவே, சமைத்த உணவு பொருட்களை வாழை இலைகள் அல்லது தட்டுக்களின் மூலமே பரிமாற வேண்டும். பொதுமக்களுக்கு தரமான சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து விற்பனை செய்திட வேண்டும். பொதுமக்கள் மேற்கண்ட இடங்களில் நெகிழி பைகள் பயன்பாடுகளை தவிர்த்து கொள்ள வேண்டும். வியாபாரிகளும் நெகிழி பைகள் விற்பனையை தவிர்க்க வேண்டும். மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் நெகிழி பைகள் பயன்பாடு உள்ள இடங்கள் பற்றிய தகவல் தெரிந்தால் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலகத்தில் உள்ள 94440 42322 என்ற வாட்ஸ்அப் (Whatsapp) எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**